**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>**

<u>அசல் வழக்கு எண். 76 /2022</u>

**<u>PW.1</u>**

இந்நீதிமன்ற எழுத்தர் திரு.தேவகி, Grade III Bench Clerk என்பவரால் முறையோடு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் 1 ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875 ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். திரு. சக்திவேல்<br>வயது. | நாள்.**31.10.2025** |
| த/பெ. திரு. புத்தயப்பன் | தொழில் |
| கிராமம் | வட்டம், |

<u>வா.சா.**1** அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

1. வழக்கு சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எதற்காக இந்த வழக்கை தாக்கல்செய்துள்ளோம் என்றால் என் தாத்தாவின் வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்துள்ளோம். என் தாத்தா சின்ன கண்ணு என்பவருக்கு 2 மனைவிகள். அவரது முதல் மனைவி முனியம்மாளுக்கு என் அப்பா ஒரே வாரிசு என்றால் சரிதான். என் தாத்தாவின் 2வது மனைவி காசியம்மாளுக்கு குழந்தைகள் இல்லை. என் தாத்தாவின் பெற்றோர் ஏற்கனவே இறந்து விட்டார்கள். அவர்களின் இறப்பு சான்றிதழ்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர்களின் இறப்பு சான்றிதழ் எங்களிடம் இல்லை.

2. என் தாத்தாவின் 2 மனைவிகளும் இறந்து விட்டார்கள். அவர்களுடைய இறப்பு சான்றிதழ்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். போதுமான ஆவணங்களுடனும் சரியான தகவல்களுடனும் நாங்கள் வழக்கை தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது)**

**(மறு விசாரணை இல்லை)**

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/Tmt.N. Valliamma,,
DM Cum JM
Cheyyur (FAC)